மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 127 / 2022**

**வா.சா.2 - லிங்கம்** **20.03.2025**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை. என்னை வாதி ஆனந்தவள்ளி சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். வாதி எனக்கு அக்கா முறை ஆவார். இந்த வழக்கு பற்றி எனக்கு வாதி சொல்லி தெரியும். எனது சொத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான். வாதி 1995 ல் வெண்ணிலையாக தாவா சொத்தை கிரையம் பெற்றார். எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் வாதி கிரையம் பெற்ற ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. சர்வே எண் 111/2 ஏ எனது பெயருக்கு 20.11.2022 ல் பட்டா ஏற்பட்டுள்ளது. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி தாவா சொத்தை என்ன விவசாயம் செய்து அனுபவம் செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. வாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அழகருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனக்கு அழகர் என்பவரையே தெரியாது. தாவா சொத்தை வாதி எந்தக்காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை வெண்ணிலையாக கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. இன்றுவரை தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நடேசனிடம் கிரையம் பெற்ற சொத்தை மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன். ஆனந்தவள்ளி தாவா சொத்தை 1994 ல் கிரையம் பெற்றதை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

**மானாமதுரை**